பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 02 | வெள்ளிக்கிழமை | 16.02.2024 | அதிர்வு 199

## கெஹலியவுக்கு விளக்கமறியல் 29 வரை நீடிப்பு



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 6 பேருக்கு 06



# பதவி ஆசையில் தமிழரசை சிதைக்கச் சிலர் சதி முயற்சி

## சம்பந்தன் கடும் சீற்றம்

(சீ.ஏ.தமிழ்மாறன்)

"நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சிதைக்கச் சிலர் சதித் திட்டம் தீட்டுகின்றனர். பதவி ஆசையில் அவர்கள் இந்தச் சதி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இது நன்றாகப் புரியும். அவர்களின் சதித் திட்டம் வெற்றியளிக்க நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். 06

# வெற்றி வேட்பாளருக்கே நான் ஆதரவு வழங்குவேன்



### தனிவழியில் செல்லத் தயாராகும் பொன்சேகா அதிரடி அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அரசியல் ரீதியில் முடிவொன்றை எடுக்கவுள்ளேன். வெற்றி வேட்பாளருக்கே நான் ஆதரவு வழங்குவேன்."

– இவ்வாறு ஐக்கிய 06



என் நண்பர் ஒருவர் நேற்று மதியம் அழைப்பு எடுத்தார்.

"அப்படி என்றால் இருவருக்கு மகிழ்ச்சி" என்றார். எனக்கு விளங்கவில்லை.

"யாருக்கு?" – என்று கேட்டேன்.

"ஒன்று – மாவையருக்கு. மீண்டும் தமிழரசுத் தலைமை தன் மடியில் வந்து வீழ்ந்தமையினால். மற்றது – உனக்கு. நீ கடந்த சில நாள்களாக உன் பத்தியில் எதிர்வு கூறி வந்தவை நடப்பதால்" – என்று 06

# ஆட்சி அதிகாரத்தை ஜே.வி.பிக்கு வழங்க மக்கள் முட்டாள்கள் அல்லர்

## அமைச்சர் பிரசன்ன விளாசல்



**"அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்குப் பேஸ்புக் அலை மட்டுமே உள்ளது. நாட்டின் ஆட்சி அதிகாரத்தை ஜே.வி. பிக்கு வழங்கும் அளவுக்கு இந்த நாட்டு மக்கள் முட்டாள்கள் இல்லை."**

**- இவ்வாறு ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும், நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டும் எனவும், ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கும்போது அதனை ஒரேயடியாகச் செய்ய முடியாது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நேற்று மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

"ஜனாதிபதி முறைமை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என அமைச்சரிடம் ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு,

"இன்று ஜனாதிபதி முறைமை பற்றி ஒரு கருத்து உள்ளது. ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என நான் நம்புகின்றேன். ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதன் மூலம் அதனைத் திடீரென மாற்ற முடியாது. அப்படியானால், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் முறை, நிர்வாக அதிகாரம் எவ்வாறு பரவலாக்கப்படுகின்றது, அரசமைப்பு ரீதியாக அந்த விவகாரங்கள் மாற்றப்பட வேண்டும். தினமும் சிறு சிறு திருத்தங்களால் ஏற்படும் நம் நாட்டில் நடந்த பிரச்சினை இது. போராட்டத்தின் போது மக்கள் அமைப்பு மாற்றத்தை ஏன் கோரினார்கள்? அமைப்பு மாற்றம் என்பது அரசியல்வாதிகளின் தவறுகள் மட்டுமல்ல. இதைத்தான் ரணில் விக்கிரமசிங்க இன்று செய்கின்றார். பொருளாதார நெருக்கடியை தீர்க்கும், முறைமையை மாற்றக்கூடிய ஒரு தலைவராக நான் ரணில் விக்கிரமசிங்கவை மட்டுமே பார்க்கின்றேன் என்று கூறுகின்றேன்." – என்று பதிலளித்தார்.

# கைதான சப்ரகமுவ பல்கலை மாணவர்களுக்குப் பிணை!

(எம்.எப்.எம். அலி)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மூன்று மாணவர்களைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட அதே பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவர்கள் 13 பேரையும் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் சரீரப் பிணையில் செல்ல பலாங்கொடை மேலதிக நீதிவான் நேற்று அனுமதி வழங்கினார்.

கடந்த 9 ஆம் திகதி இரவு சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாயப் பிரிவில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்று வந்த மூன்று மாணவர்களைத் தாக்கிய குற்றச்சாட்டில் அதே பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவர்கள் எழுவர் கைது செய்யப்பட்டதுடன், ஏனைய 6 மாணவர்களும் 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

மேற்குறிப்பிடப்பட்ட 13 மாணவர்களையும் பலாங்கொடை மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது, அவர்களை 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில், மேற்படி மாணவர்கள் நேற்று பலாங்கொடை மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இவர்கள் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட 13 மாணவர்களையும் மீண்டும் இன்று பலாங்கொடை மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

# நாட்டில் திருமண விகிதமும் பிறப்பு விகிதமும் குறைவு



இலங்கையில் திருமண வீதமும் பிறப்பு வீதமும் படிப்படியாகக் குறைந்து வருகின்றது என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானப் பேராசிரியர் இந்திரலால் டி சில்வா தெரிவித்தார்.

சமீபத்திய கணக்கெடுப்பின் தரவுகளை அறிவித்த பேராசிரியர், புதிதாகப் பிறந்தவர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சம் குறைந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

தற்போது நாட்டில் உள்ள பெண்களுக்குத் திருமணம் செய்து கொள்வதற்குத் தகுதியான ஆண் ஒருவரைத் தேடுவது கடினம் என்றும் அவர் கூறினார்.

அடுத்த 10 ஆண்டுகளில் நாட்டின் இளைஞர் சனத்தொகையில் கணிசமான குறைவைக் காண முடியும் என்றும் பேராசிரியர் இந்திரலால் டி சில்வா மேலும் தெரிவித்தார்.





# விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆராய்வு

மஹா கனதராவ குளத்தை நீராதாரமாக கொண்ட அனுராதபுரம் நீர் வேலைத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மக்கள் பாவனைக்காகக் கையளித்தார்.

அத்துடன், அதனை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் ஜனாதிபதி ஆராய்தார்.

இதன்போது விவசாயிகள் ஜனாதிபதியிடம் தங்களது பிரச்சினைகளை நேரடியாகக் கூறினர். அதற்கு ஜனாதிபதி சாதகமாகப் பதிலளித்தார்.

வேலைத் திட்டத்திற்கான எதிர்ப்பு தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, நீர்த்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளமையால், எதிர்ப்புக்களை கைவிடு மாறும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து சிந்துக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அது தொடர்பிலான மக்களின் யோசனைகளை இரண்டு வாரங்களுக்குள் பெற்றுத்தருமாறும், அவற்றில் சாதகமான விடயங்களை விரைவில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கி றேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மஹா கனதார குளத்தை அண்மித்து வசிக்கு விவசாயிகளுக்கு வழங்கிய வாக்குறுதி களை நிறைவேற்றுவார் என நம்புகின்றோம் என மஹாகன தார ஒருங்கிணைந்த விவசாயிகள் சங்கத் தலைவர் சுபசிங்க ரத்நாயக்க தெரிவித்தார்.

மஹாகனகதராவ குளத்திற்கு நீரைக் கொண்டு வரும் கால்வாய்களைப் புனரமைப்பதற்குத் தேவையான நிதியை வழங்கினால் பெருமளவிலான நீரைச் சேமிக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, மஹாகனதராவ குளத்தின் புனரமைப்பு பணிகளுக்கு இவ்வருடத்தில் வழங்கப்பட்டிருக்கும் ஒரு பில்லியன் ரூபாவை உடனடியாக பயன்படுத்துமாறும் வலியுறுத்தினார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்து தெரிவிக்கையில் –

"இந்த வேலைத் திட்டத்தை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பது தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும். இந்த திட்டத்தை இடைநடுவில் கைவிட முடியாது. நாம் எல்லா சந்தர்ப்பங்களிலும் விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

இதுவரையில் எல்லா அரசாங்கத்திலும் நீர் வழங்கல் சபை ஓர் அமைச்சின் கீழும் நீர்ப்பாசன திணைக்களம் வேறு ஓர் அமைச்சின் கீழும் காணப்பட்டது. இம்முறை அவை இரண்டும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அதனால் இந்த வேலைத் திட்டத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பான தீர்மானங் களை எடுக்க வேண்டும்." – என்றார்.











# பொருளாதார மாற்றத்திற்காக ஒன்றிணையுங்கள் எதிர்க் கட்சியினருக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு

பொருளாதார மாற்றத்திற்காக ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மீண்டும் எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு விடுத்தார்.

அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டத்தின் முதற்கட்டத்தை ஆரம்பிக்கும் வகையில், மஹா கனதராவ நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வின் போதே ஜனாதிபதி இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

இந்த குடிநீர் திட்டத்திற்கு 11,515 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனமான ஜெய்கா நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 5166 மில்லியன் கடன் நிவாரணம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதியில் இந்த திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்,

” 2022 ஆம் ஆண்டில் நாட்டை பொறுப்பேற்க எவரும் முன்வராத காரணத்தினால் நான் பொறுப்பேற்றுக்கொண்டமையை அனைவரும் அறிந்திருப்பார்கள். அதன் பிறகு பல் வேறு கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்து நாட்டை கட்டியெழுப்பும் திட்டத்தை முன்னெடுத்தோம். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில்தான் நாம் இந்த திட்டத்தையும் ஆரம்பித்தோம்.

அன்று அதிகமானவர்கள் எங்களுடன் இருக்கவில்லை. சிலர் நாடாளுமன்றத்தை கலைக்கச் சொன்னார்கள்.

அப்போது விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் இல்லை. எரிபொருள் இல்லை. இவ்வாறான நிலையில் தேர்தலை எவ்வாறு நடத்துவது, முதலில் இப்பிரச்சினைகளைத் தீர்த்து உரிய காலத்தில் தேர்தலை நடத்த விரும்பினோம்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக இதுவரை பல பணிகளைச் செய்துள்ளோம்.

05 ▶













# பொருளாதார மாற்றத்திற்காக ஒன்றிணையுங்கள் எதிர்க் கட்சியினருக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் நாம் இன்னும் கடன் சுமையில் இருந்து விடுபடவில்லை. கடன் தொடர்பில் ஓரளவு சலுகை கிடைத்துள்ளது. கடனை திருப்பிச் செலுத்த மேலும் 20 ஆண்டுகள் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. விரைவான பொருளாதார மாற்றத்தை நாம் ஏற்படுத்தாவிட்டால், அந்த கடன்களை செலுத்த மேலும் அதிகளவான கடன்களைப் பெற வேண்டியிருக்கும்.

நாம் இந்த நாட்டைப் பொறுப்பேற்ற போது மக்களுக்குத் தேவையான உணவு இருக்கவில்லை. எரிபொருள் இல்லை.

இந்தத் தேவைகளை பூர்த்தி செய்வதே முதலில் செய்ய வேண்டிய விடயம். யுத்த காலங்களில், அரசாங்கங்கள் வீழ்ச்சியடையும் போது, எந்தவொரு அரசாங்கமும் முதலில் செய்ய வேண்டியது இந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும்.

நாட்டில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கே நாம் முதலில் நடவடிக்கை எடுத்தோம். இன்று நாட்டில் ஸ்திரத்தன்மை உள்ளது. மேலும் சட்டம், ஒழுங்கு பேணப்படுகின்றது. அரசை யார் வேண்டுமானாலும் விமர்சிக்கலாம். பேரணிகளை நடத்தலாம். அந்த ஸ்திரத்தன்மை இன்று நிலைநாட்டப்பட்டுள்ளது.

புதிய தொழிற்சாலைகளை நாட்டுக்குள் கொண்டு வரும் நோக்கில் சுற்றுலா வர்த்தகம் குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளோம். உணவு வழங்குவது மாத்திரம் போதுமானதல்ல. எமது இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. இன்னும் 5 - 6 வருடங்கள் நாம் இவ்வாறு காத்திருக்க முடியாது. நாம் விரையில் அந்நிய செலாவணியை ஈட்டிக் கொண்டு அதற்காக வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். பொருளாதார மாற்றத்துக்கான செயற்பாடுகளுக்கான புதிய சட்டத்தை கொண்டு வர நாம் எதிர்பார்க்கிறோம். நாம் அனைவரும் ஒன்றுபட்டு இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம்.

தேர்தல் காலத்தில் நாம் தனிப்பட்ட அரசியல் செயற்பாடுகளை வெவ்வேறாக முன்னெடுப்போம். தேர்தலின் பின்னர் ஒற்றுமையாகச் செயற்படுவோம். அவ்வாறான முறைமையிலேயே நாம் செயற்பட வேண்டும். நாம் பிரிந்திருந்தால் கிராம மக்களுக்கு எந்த நலனும் கிடைக்காது. இன்றும் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படுவோம் என்றே கூறுகிறேன். அரசாங்கத்திற்காகவும் எதிர்கட்சிக்காகவும் ஒன்றுபடுங்கள் என்று கூறவில்லை. மக்களுக்காக ஒன்றுபடுவோம் என்றே அழைக்கிறேன். அனைவரும் ஒன்றுபடுவதால் வேலைத்திட்டங்களை துரிதமாக முன்னெடுத்துச் செல்ல முடியும்."– என்றார்.







## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விளக்கம் அளித்தார் என் நண்பர். நான் மறுத்தேன்.

“மாவையர் இப்போது மகிழலாம். ஆனால் இதுவரை தாக்கலாகி இருக்கும் இந்த இரண்டு வழக்குகளும் முழு அளவில் விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு வந்தால் மாவையரின் வண்டவாளம் தண்டவாளம் ஏறும். அவரின் நடத்தை தொடர்பில் நீதிமன்றம் தெரிவிக்கப் போகும் கருத்துக்கள் சந்தி சிரிக்க வைப்பவனவாக இருக்கலாம். எது நடக்கக்கூடாது என்பதற்காக முன்னெச்சரிக்கையாக விடயங்களை நான் முன் வைத்தேனோ, அவற்றை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் பொருட்படுத்தாமல் போக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால் எனக்கு மன வருத்தமே. என் எச்சரிக்கை எடுபடவேயில்லை என்ற தோல்விதான் எனக்கு!” – என்று விளங்கப்படுத்தினேன்.

பாவம் நண்பர் சிறீதரன். இவ்வளவு கஷ்டப்பட்டுக் காரியமாற்றிப் பெற்ற தலைமைப் பதவியை உரிய கௌரவத்துடன் பொறுப்பேற்க முடியாமல் இழுத்தடிக்கப் பண்ணிய தரப்புகள் மீது எனக்கும் கோபம் உண்டு. விரைவில் பிரச்சினைகளைச் சமுகமாகத் தீர்த்து அவர் கட்சிக்குப் புதிய வேகத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு அவர் முதலில் தம்மைச் சூழவுள்ள உண்மையான நண்பர்கள் யார், கபட வேடமிட்டு நிற்கும் எதிரி யார் என்பதை அடையாளம் காண வேண்டும் என்பது என் கருத்து.

எல்லோரையும் அரவணைத்துச் செல்கின்றேன் என்ற அவரது தத்துவத்தின் – கருத்தின் – உள்ளாந்தம் என்பது சுமந்திரன் அணியை வெட்டுவதாக இருப்பது போல என் மனதுக்குப் பட்டது. கண்ணுக்குத் தெரிந்தது. அதனால் ஏற்பட்ட மனப்பதிவுகளை நான் வெளிப்படுத்தினேன். அது எதிரித்தனம் அல்ல. மற்றபடி அவரது தலைமை வெற்றி பெற நானும் விரும்புகிறேன்.

நிலைமை இவ்வளவு தூரம் மோசமடைந்தமைக்குப் பிரதான காரணம் கட்சியின் மூத்த தலைவர்கள் என்று கூறப்படும் சம்பந்தனும் மாவையும்தான் என்பது என் கருத்து. மாவை பற்றி அதிகம் பேசப்பட்டாயிற்று. இனியும் பேசுவதில் அர்த்தமில்லை.

இந்த இருவரில் சம்பந்தன் மிக மோசமான தீங்கை கட்சிக்கும் – தன் பிரதேசத்துக்கும் – தமிழ் மக்களுக்கும் – செய்து கொண்டிருக்கின்றார் என்ற உண்மையை உணரவும் உரைக்கவும் நம்மவர்கள் பின்னடிக்கின்றனர்.

2014 – 15 களில் வடக்கு மாகாண சபையில் முதல்வர் விக்னேஸ்வரனுடன் கட்சிக்குள் சர்ச்சை எழுந்த போது – கட்சியில் ஏனையோரின் விருப்பத்தை மீறி, பலவந்தமாக விக்னேஸ்வரனைக் கூட்டி வந்து திணித்த சம்பந்தன் – அந்தப் பிரச்சினைகளைச் சரிவரக் கையாளவில்லை. இல்லை.. இல்லை... அவர் கையாளவே இல்லை.

இப்போதும் கூட கட்சிக்குள் சுமந்திரன் அணி, சிறீதரன் அணி என்ற வேறுபாடு வந்த போது அதை கையாள்வதை விடுத்து, அதில் தன் மாவட்டத்தில் – திருகோணமலையில் – தன்னுடன் கருத்து முரண்படும் குகதாசனை பழி தீர்க்கும் சிறுமைத்தனத்துடன்தான் அவர் விடயங்களை முன்னெடுக்கின்றார்.

இந்த வழக்குகளை ஒட்டி இப்போது அவர் வெளியிட்டிருக்கும் பகிரங்க அறிவிப்பு கூட, குகதாசனை இலக்கு வைக்கும் அரசியல் சிறுமைத்தன நடத்தைதான். ஒரு முதிர்ந்த அரசியல் தலைவருக்குரிய ஏற்பாடு அல்ல.

வயது கூடி, முதுமை வர, சிறுமைத்தனமும் வந்து விடுகின்றது போல.

‘பதவி ஆசையில் தமிழரசைச் சிதைக்க சிலர் முயற்சி!’ என்று சம்பந்தன் கூறினாலும், சில பேருக்கு பதவி கிட்டிவிடக்கூடாது என்பதற்காக சம்பந்தன் தரப்பு முன்னெடுக்கும் சதி வேலையே இது என்ற சந்தேகம் பலருக்கு இருப்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

இப்படி வழக்கு வரும், கட்சியின் தேசிய மாநாட்டுக்கு தடை வரும் என்று முதலில் கட்சிக் கூட்டத்தில் – அதுவும் இந்தத் தள்ளாத முதுமையிலும், கம்பீரமாக எச்சரித்தவர் சம்பந்தன்தான் என்ற உண்மையை முதலில் அம்பலப்படுத்த வேண்டியுள்ளது.

இது நடந்தது கடந்த ஜனவரி 10ஆம் திகதி. அன்று சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் தமிழரசின் அரசியல் குழுவும், அழைக்கப்பட்ட மேலதிக பிரதிநிதிகள் சிலரும் கூடியிருந்தனர். திருகோணமலையிலிருந்து தெரிவான பொதுக் குழு உறுப்பினர்களை முழுமையாக மாற்ற வேண்டும் என்று ஒற்றைக்காலில் அடம்பிடித்தார் சம்பந்தன். அது குகதாசனுடன் அவருக்கு ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினைகளின் விளைவு. அரசியல் குழு அவரின் அந்த வற்புறுத்தலை ஏற்க மறுத்தது. அதில் நியாயம் இல்லை என்று எடுத்துரைத்தது. அதனால் சீற்றமுற்றார் சம்பந்தன்.

“அப்படியானால் அதற்கு எதிராக நீதிமன்றுக்குப் போனால் என்ன செய்வது?” – என்று மிரட்டினார் சம்பந்தன்.

உடனே அவருக்கு அருகில் இருந்த சுமந்திரன் சற்றுக் குரலை எழுப்பி, சம்பந்தனை நோக்கி “ஐயா! என்ன நீதிமன்றைக் காட்டி எங்களை மிரட்டுகின்றீர்களா? அப்படி யாரும் நீதிமன்றுக்குப் போனால் நான் விடயத்தைப் பார்க்கிறேன். இந்த அச்சுறுத்தல் எங்களிடம் வேண்டாம்!” – என்று சத்தமாகப் பதிலிறுத்து அடக்கினார் சுமந்திரன்.

இப்போது அதுதான் நடக்கின்றது. குகதாஸனுக்கு முதல் வருடம் கட்சி யின் பொதுச் செயலாளர் பதவியை வழங்குவதற்கு குகதாஸனுடனும், சிறீநேசனுடனும் கட்சியின் புதிய தலைவராகத் தேர்வு செய்யப்பட்ட சிறீதரன் எழுத்தில் இணக்கத்துக்கு வந்து விட்டார். அதைத் தாங்க முடியாத சம்பந்தன் பொதுக்குழுவில் குழப்பத்தை ஏற்படுத்தத் தூண்டும் விதத்தில் சிறீதரன், சால்ஸ் நிர்மலநாதன் போன்றோரை ஒரு சில தினங்களுக்கு முன்னர் தான் சந்தித்தபோது கருத்து வெளியிட்டிருந்தார். இப்போது வழக்கு மூலம் தடை உத்தரவு வந்திருக்கிறது.

அதுவும் திருகோணமலையிலிருந்து – சம்பந்தனின் தொகுதியில் இருந்து – இனம் தெரியாத தரப்புக்களின் பின்னணியில் இருந்து – இந்த வழக்கும் அதனால் தடை உத்தரவும் வந்துள்ளன.

சம்பந்தன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளராக இருந்தபோது தான் அந்தக் கட்சியும் உதயசூரியன் சின்னமும் ஆனந்தசங்கரியிடம் பறிபோயின. இப்போது வீட்டுச் சின்னத்தையும் முடக்கி விட்டுத்தான் சம்பந்தர் ஓய்வார் போலும்.

இப்படி வயது போய் முதிர்ந்த நிலையில் எம்.பி. பதவிச் சுகத்தை விடாமல் அனுபவித்தபடி காரியமாற்றும் அவர், மூத்த தலைவர் என்ற முறையில் சம்பந்தப்பட்ட தரப்புகளை அழைத்து, சமரசம் பண்ணி, கட்சியை ஒன்று படுத்துவதை விடுத்து –

தம்மோடுதிருகோணமலையில்போட்டியாக அரசியல் நடத்துகிறார் குகதாசன் என்று கருதி, தாம் கொண்டிருக்கும் காழ்ப்புணர்ச்சி காரணமாக குகதாசன் பொதுச் செயலாளராகப் பதவி வகித்து விட அனுமதித்து விடக்கூடாது என்ற பொறாமையில் சின்னத்தனமாக – மிகவும் சின்னத்தனமாக – அரசியல் செய்கின்றார் சம்பந்தன்.

தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டை முடக்கும் வழக்குகளின் நதி மூலம் ரிஷி மூலத்தை தேடிப் பாருங்கள். எனக்கு என்னவோ அங்கு சம்பந்தனின் ஆசீர்வாதமும் இருக்கும் என்றுதான் தோன்றுகின்றது.

## கெஹலியவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசியை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலம் பெற்றிருந்தது.

இந்தநிலையில், கடந்த 2ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் அவரைக் கைது செய்து மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இதனையடுத்து அவரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

## வெற்றி வேட்பாளருக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கூறியதாவது:-

“எனது பார்வையில் ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும். நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதனையே விரும்புவார்கள். நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்திவிட்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் உறுப்பினர்களின் ஆதரவைப் பெற முடியாமல் போகும்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே நான் அரசியல் ரீதியில் முடிவை எடுப்பேன். அப்போது கள நிலைவரம் என்னவென்று தெரியவரும்.

கடந்த முறை கூட கட்சி அழுத்தத்தால் ரணில் பின்வாங்கி, சஜித் களமிறக்கப்பட்டார். எது எப்படி இருந்தாலும் கள நிலைவரத்துக்கேற்ப வெற்றி வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அந்த வேட்பாளருக்கு நான் அதரவு வழங்கமாட்டேன்.” – என்றார்.

## பதவி ஆசையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகவும், கட்சியின் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்த பொதுக் குழுக் கூட்டங்களின் முடிவுகளுக்கு எதிராகவும் யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து நேற்று இடைக்காலத் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் சம்பந்தனிடம் நாம் வினவிய போது, நீதிமன்றங்களின் இடைக்காலத் தடை உத்தரவுகள் தொடர்பில் தான் இப்போது கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்று கூறியதுடன் மேற்படி விடயங்களையும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கைத்தமிழரசுக்கட்சியின் நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் இணக்க அடிப்படையில் எட்டப்பட்ட முடிவுகளை பொதுச்சபை அங்கீகரிக்காதவிடத்து அல்லது அந்தத் தெரிவுகளில் குழப்பங்கள் நிலவுமிடத்து, தேர்தல் முறைமை மூலம் தெரிவுகளை நடத்துங்கள் என்றும், அன்றைய தினமே மாநாட்டையும் நடத்தி முடியுங்கள் என்றும் கடந்த செவ்வாய்க்கிழமை தன்னைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் (இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர்) சம்பந்தன் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கான்ஸ்டபிளுக்குப் பாலியல் தொல்லை: பொலிஸ் பொறுப்பதிகாரி பணி நீக்கம்!



கற்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பெண் பொலிஸ் கான்ஸ்டபிளுக்குப் பாலியல் தொல்லை கொடுக்க முயன்ற குற்றச்சாட்டுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

முன்னதாக, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவருக்குப் பிணை வழங்கப் பட்டுள்ள நிலையில், வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி மீண்டும் விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

# மாணவியை வன்புணர்ந்த ஓட்டோ சாரதிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை

## நுவரெலியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(ஆ.ரமேஷ்)

தனது உறவுக்கார சிறுமியைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய 35 வயது நபருக்கு நுவரெலியா மேல் நீதி மன்றத்தால் 10 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதிக் கப்பட்டுள்ளது.

நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் வீரசூரியவால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவியான சிறுமியைத் துஷ்பிரயோ கம் செய்த குற்றச்சாட்டில், ஓட்டோ சாரதியான குறித்த சந் தேகநபர் கைது செய்யப்பட்டு, அவருக்கு எதிராக 2013 இல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டதையடுத்தே மேற்படி தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 7 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறும், நீதிமன்றத்துக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள் ளது.

நட்டஈடு மற்றும் அபராதத் தொகைகள் செலுத்தாத பட்சத் தில் மேலும் 6 மாத கால சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

வலப்பனை பகுதியைச் சேர்ந்த ஓட்டோ சாரதிக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அடுத்தது என்ன?

இலங்கைத் தமிழரசுக் கட்சி விடயத்தில் எது நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ - எது நடக்கக் கூடும் என எச்சரிக்கப்பட்டதோ - அது கடைசியில் நடந்தே விட்டது.

கட்சித் தலைவர்கள், பிரமுகர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் இப்போதாவது சுதாகரித்துக் கொண்டு, நிலைமையை ஒரு கட்டுக்குள் கொண்டு வராவிட்டால் பாரம்பரிய சரித்திரம் கொண்ட இக்கட்சியின் இருப்பு - எதிர்காலம் - எல்லாம் கேள்விக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இப்போதாயினும், சின்னத்தனங்கள் - வீம்புப் போக்குகள் - நடிப்பு அரசியல் பித்தலாட்டங்கள் - உணர்ச்சிப் பேச்சுக்கள் போன்றவற்றை புறந்தள்ளி வைத்துவிட்டு, களயதார்த்தங்களைப் புரிந்து கொண்டு, அவற்றுக்கேற்ப அரசியல் காய் நகர்த்தல்களையும் அணுகுமுறைகளையும் மாற்றிக்கொள்ளதலைவர்கள்முன்வராவிட்டால், அக்கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வா கூறியமை மாதிரி, கடவுள் வந்தும் கூடக் காப்பது தமிழரசுக் கட்சியை பொறுத்தவரை சாத்தியமாக மாட்டாது என்பதுதான் நிலமை.

கட்சியின் யாப்புக்கு அமைய கட்சியை வழிநடத்தும் எந்தக் காரியத்தையும் கடந்த பத்து ஆண்டுகளாக அதைத் தலைமை வகித்து நடத்திய மாவை சேனாதிராஜா ஒழுங்காக முன்னெடுக்கவில்லை என்பது வெளிப்படையானது. 'போராட்டம்', 'போராட்டம்' என்று வெற்று வேட்டு அறிவிப்புகளை முழங்கிக் கொண்டு பதவிக் கதிரைக்கும் வரும்படிக்கும் பின்னால் சுயநலத்துடன் அலைந்தமையைத் தவிர, உருப்படியாக வேறு எதனையும் அவர் செய்யவில்லை என்பதைப் பல தடவைகள் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டியாயிற்று. கட்சியின் வருடாந்த தேசிய மாநாட்டை கூட்டுவதற்கான உருப்படியான நடவடிக்கை எதனையும் அவரது தலைமையிலான நிர்வாகம் உரிய காலத்தில், உரிய முறையில் முன்னெடுக்கவே இல்லை.

மூலக்கிளைகள், தொகுதிக் கிளைகள், மாவட்டக் கிளைகள், பொதுக்குழு எல்லாவற்றையும் கூட்டிய விவகாரத்தில் ஒரே குழப்பம். கட்சி யாப்பைக் குப்பை கூடைக்குள் கடாசி எறிந்து, அவரது நிர்வாகம் காரியமாற்றியது என்பது கண்கூடு. பொதுக்குழுவுக்கு பிரதிநிதிகளை கூட்டுவித்த அவரது தலைமையின் போக்கும் நடத்தையும் விதமும் முறைமையும் சந்தி சிரிக்கும் விவகாரங்கள்.

இப்படிக் கிளைகளை முறையாகக் கூட்டாமல் இழுத்தடித்தால், அதையே காரணம் காட்டி, தேசிய மாநாட்டைக் கூட்டாமல் மேலும் பல வருடங்கள் தாம் தலைவர் பதவியில் தொடரலாம் என்று மனப்பால் குடித்தவர் அவர். அதன் விளைவுதான் கட்சியின் இன்றைய விபரீத நிலைமை.

எது, எப்படி என்றாலும், கட்சித் தலைமை மீண்டும் தன்மடியில் விழுந்துவிட்டது என்று இப்போது அவர் மகிழலாம். ஆனால் தற்சமயம் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்குகள், கட்சியின் உள்விடயங்களை அவிழ்த்துக் கொட்டி விசாரிக்கும் நிலைமை ஏற்பட்டால், அதன் பின்னர் வரக்கூடிய நீதிமன்றத் தீர்ப்பு அவரை மேலும் படுமோசமாக அம்பலப்படுத்தக் கூடும். ஆனால் அதற்கும் இரண்டு, மூன்று வருடங்கள் இழுபடலாம்.

அதற்கிடையில் தேசிய மாநாடு கூட்டப்படாத காரணத்தால் கட்சியின் சின்னம் தேர்தல் ஆணையத்தால் முடக்கப்படும் ஆபத்து நேர்ந்தாலும் நேர்ந்து விடலாம்.

யாழ்ப்பாணம், திருகோணமலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் கட்சியின் ஏழெட்டுப் பிரமுகர்கள் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். கட்சி விவகாரத்தில் அவர்கள் முரண்பட்ட நிலைப்பாட்டை கொண்டிருப்பவர்கள். இந்த வழக்குகளை ஒட்டி ஒவ்வொருவரும் தத்தமது நிலைப்பாட்டுக்கேற்ப, முரண்பட்ட நிலைகளை எடுத்து, அவற்றைத் தங்கள் தரப்பு வாதங்களாக - சத்தியக் கடதாசிகளாக - ஆவணங்களாக - சமர்ப்பணம் செய்தால் கட்சியின் நிலைமை இன்னும் மோசமாகப் பாதிக்கப்படும்.

கட்சியில் நடந்து முடிந்த - இப்போது நீதிமன்றத்தில் சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் - பொதுக்குழுக் கூட்டங்கள் தொடர்பில் தமது நிலைப்பாட்டைப் பகிரங்கக் கடிதம் மூலம், தம்முடன் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு வென்ற சிறீதரனுக்கு தெளிவுபடுத்தி இருக்கின்றார் சுமந்திரன். அதற்கான பிரதிபலிப்பையோ, மறுத்துரைப்பையோ சிறீதரனோ, மாவையோ, கட்சியின் மற்றைய முக்கிய பிரமுகர்களோ இன்னும் வெளிப்படுத்தவேயில்லை. மாறாக, அம்சடக்காக இருந்து கொண்டு காரியமாற்றியே வந்தனர்.

தமது அந்த நிலைப்பாட்டில் இருந்து இப்போதும் - நீதிமன்றக் கட்டாணைகளின் பின்னரும் - சுமந்திரன் மாறி இருக்க மாட்டார் என்று கருத முடியும்.

அந்த நிலைப்பாட்டை மையப்புள்ளியாக - பற்றுக் கோடாக - வைத்துக்கொண்டு, அதை ஒட்டிக் கட்சியின் அனைத்துப் பிரமுகர்களையும் ஒன்றுபடுத்தி, ஒரே குரலில், சுமந்திரன் மூலம், நீதிமன்ற சர்ச்சையைக் கட்சி எதிர்கொள்வதுதான் இந்த நெருக்கடியில் இருந்து சுலபமாகத் தாண்டுவதற்கு நல்ல உபாயமாக இருக்கக்கூடும்.

இந்த வழக்குகளை சவாலுக்குச் சவாலென எதிர்கொள்ள முற்பட்டால், மூலக்கிளைகளிலிருந்து ஒவ்வொன்றையும் ஆரம்பத்தில் இருந்து தொடங்க வேண்டி இருக்கும். அப்படி ஆரம்பித்து தேசிய மாநாட்டை முடிக்க வருடங்கள் தாண்டும்.

அதை விடுத்து, சுமந்திரனை முன்நிறுத்தி, ஒன்றுபட்டு வழக்கை எதிர்கொண்டு - முடியுமானால் வழக்காளிகளுடன் சமரசமாக தீர்க்க முனைந்தால் - அடுத்த தவணையிலேயே சர்ச்சையை முடிவுக்கு கொண்டு வர வாய்ப்பு கிட்டினாலும் கிட்டலாம். முயற்சிப்பது கட்சியை வழி நடத்துபவர்களின் அறிவு முதிர்ச்சியைப் பொறுத்தது.



# பஞ்சாப்பில் விவசாயிகள் ரயில் மறியல் போராட்டம்

## சுங்கச் சாவடிகளிலும் போராட்டம்



டில்லி நோக்கி பேரணி சென்ற விவசாயிகள் மீது ஹரியாணா பொலிஸார் நடத்திய தாக்குதலைக் கண்டித்து பஞ்சாப்பின் பல இடங்களில் விவசாயிகள் தண்டவாளங்களில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், டில்லி – அமிர்தசரஸ் வழித்தடத்தில் செல்லும் ரயில்கள் நேற்று திருப்பிவிடப்பட்டன. விவசாயிகள் பல சுங்கச் சாவடிகளில் அமர்ந்தும் போராட்டம் நடத்தினர்.

பஞ்சாப் – ஹரியாணா எல்லையில் விவசாயிகளைத் தடுத்து நிறுத்திய ஹரியாணா பொலிஸார் அவர்கள் மீது கண்ணீர் புகைகுண்டு மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற் கொண்டனர்.

விவசாயிகள் மீதான இந்தத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரதிய கிஷான் யூனியன் மற்றும் பிகேயு தகுன்தா அமைப்புகள் பஞ்சாப்பில் நேற்று நான்கு மணி நேர ரயில் மறியல் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன.

இதனைத் தொடர்ந்து பஞ்சாப்பின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் நேற்று பகல் 12 மணிக்கு தண்டவாளங்களில் அமர்ந்து ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுப்படனர்.

இந்த மறியல் போராட்டம் மாலை 4 மணி வரை இடம் பெற்றது. டில்லி அமிர்தசரஸ் வழித்தடத்தில் பல்வேறு இடங்களில் விவசாயிகள் தண்டவாளங்களில் அமர்ந்து மறியல் செய் தனர். இதனால் ரயில்வே அதிகாரிகள் இந்த வழித்தடத்தில் செல்லும் ரயில்களை வேறு வழித்தடத்தில் திருப்பி விட்டனர். டில்லி செல்லும் ரயில்கள் சண்டிகர் வழியாகவும், அமிர்தசரஸ் மற்றும் ஜலந்தர் பகுதிக்கு செல்லும் ரயில்கள் லோஹியன் காஸ் பகுதிக்கும் திருப்பி விடப்பட்டன.

இதுகுறித்து இந்திய ரயில்வேயின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

"டில்லியில் இருந்து வரும் சதாப்தி மற்றும் ஷான் பஞ்சாப் விரைவு ரயில் ஆகியவை லூதியானாவில் நிறுத்தப்பட்டன" என்று தெரிவித்தார்.

இதனிடையே, சம்யுக்தா கிஷான் மோர்ச்சா அழைப்பின் பேரில், பல்வேறு சுங்கச்சாவடிகளிலும் விவசாயிகள் போராட் டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் சுங்கச்சாவடி அதிகாரி களை கட்டணம் வசூலிக்காமல் வாகனங்களைச் செல்ல அனுமதிக்க வலியுறுத்தினர்.

பாரதிய கிஷான் யூனியன் தலைவர் ஹர்மித் சிங் கடியன், "டில்லி நோக்கி செல்ல முயன்ற விவசாயிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து நாங்கள் இந்தப் போராட்டத்தை நடத்துகிறோம்" என்று தெரிவித்தார்.

அதேபோல், ஹோசியார்பூரில் ஜலந்தர் – பதான்கோட் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள இரண்டு சுங்கச்சாவடியிலும் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத் தின் போது மத்திய அரசுக்கும், ஹரியாணா அரசுக்கும் எதிராக கோஷங்கள் எழுப்பினர். விவசாயிகளுக்கு நீதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஸ்தூர் மோர்ச்சா உள்ளிட்ட 200 விவசாய அமைப்புகள், அனைத்து பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டப் பாதுகாப்பு, விவசாய கடன், சுவாமிநாதன் கமிஷனின் பரிந்துரையை அமுல்படுத்



துதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து விவ சாயிகள் பஞ்சாப்பில் இருந்து கடந்த 13 ஆம் திகதி டில்லி நோக்கி செல்லும் பேரணியைத் தொடங்கினர். இப்பேரணி பஞ்சாப் – ஹரியாணா, ஹரியாணா – டெல்லி எல்லை களைக் கடந்து தேசிய தலைநகரை அடைய வேண்டும்.

விவசாயிகளின் பேரணி பஞ்சாப்பில் இருந்து காலை 10 மணிக்கு தொடங்கி இரண்டு மணிநேரம் கழித்து ஹரிய-ாணா எல்லையான ஷம்புவை அடைந்தது.

இந்த நிலையில், போராட்டக்காரர்கள் மீது ஹரியாணா பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசி தடுத்து நிறுத்தினர். இரண்டாவது நாளான நேற்று முன்தினமும் விவசாயிகள் மீது கண்ணீர் புகை குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டது.

# எம்.பி. பதவியை துறந்தார் நடிகை மிமி சக்ரவர்த்தி

திரிணமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மக்களவை உறுப்பினரும், நடிகையுமான மிமி சக்ரவர்த்தி தனது நாடாளு மன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை அவர் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜியிடம் அளித்துள்ளார்.

திரிணமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நடிகை மிமி சக்ரவர்த்தி கடந்த மக்களவைத் தேர்தலில் ஜாதவ்பூர் தொகு தியில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதல்முறை எம்.பி ஆனார்.

இந்த நிலையில், கொல்கத்தாவில் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜியை நேற்று சந்தித்த மிமி சக்ரவர்த்தி, அவரிடம் தனது இராஜினாமா கடிதத்தைக் கொடுத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மிமி சக்ரவர்த்தி,

"இன்று கட்சித் தலைவரை சந்தித்தேன். எனது இராஜினாமா கடிதத்தை அவரிடம் கொடுத்தேன். இத்தனை ஆண்டுக ளில் எனக்கு கிடைத்த புரிதல் என்னவென்றால், அரசியல் எனக்கானது அல்ல. எனக்கு அதில் விருப்பம் இல்லை." – என்றார்.



மக்களவை சபாநாயகரிடம் இராஜினாமா கடிதத்தைக் கொடுக்காமல் கட்சித் தலைவரிடம் கொடுத்தது ஏன் என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த மிமி சக்ர வர்த்தி,

"கட்சியின் ஒப்புதலுக்காக கொடுத்துள்ளேன். ஒப்புதல் கிடைத்ததும் மக்களவை சபாநாயகரிடம் கொடுப்பேன்" என தெரிவித்துள்ளார்.

இன்னும் இரண்டு மாதங்களில் மக்களவைத் தேர்தல் வர உள்ள நிலையில், மிமி சக்ரவர்த்தி தனது எம்.பி. பதவியை இராஜினாமா செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாவதை விட ஜோ பைடன் வருவதையே ரஷ்யா விரும்பும்

## விருப்பம் தெரிவிக்கும் ரஷ்யா



அமெரிக்காவில் இரண்டாவது தடவையாக டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாவதை விட ஜோ பைடன் வருவதையே ரஷ்யா விரும்பும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

““பைடன் நீண்ட அனுபவம் உடையவர் மட்டுமல்ல, அவர் நடவடிக்கைகளை எளிதில் யூகிக்க கூடியவை. அவர் கடந்த காலத்து அரசியல் சிந்தனைகள் மற்றும் நடவடிக்கைகளை கொண்டவர்.

ஆனால், டொனால்ட் ட்ரம்ப் அவ்வாறு அல்ல. ட்ரம்பை பிறரால் புரிந்து கொள்ளவோ அல்லது அவரது நடவடிக்கைகளை யூகிக்கவோ முடியாது.

இருப்பினும், அமெரிக்காவில் யார் ஜனாதிபதியாக பதவி ஏற்றாலும் அவர்களுடன் ரஷ்யா இணைந்து பணியாற்றும். நேட்டோவில் அமெரிக்காவின் ஈடுபாடு குறித்து ட்ரம்ப் கொண்டிருக்கும் சிந்தனைகளில் நியாயம் உள்ளது.

ஆனால், முடிவு செய்ய வேண்டியது அமெரிக்காவின் பொறுப்பு. மேலும், பைடனின் உடல்நலம் குறித்து கருத்து தெரிவிக்க நான் வைத்தியர் அல்ல.

அவரது உடலாரோக்கியம் குறித்து நான் பேசுவது முறையாக இருக்காது. அத்தோடு 2021ஆம் சுவிட்சர்லாந்து நாட்டில் பைடனை நான் சந்தித்த போது அவர் நலமாகத்தான் இருந்தார்.” – என்றார்.



# அமெரிக்காவில் இந்த ஆண்டில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 81 பேர் பலி

அமெரிக்காவில் இந்த ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் சுமார் 81 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த வருடத்தின் முதல் 2 மாதங்களில் மாத்திரம் இவ்வாறான 49 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், கன்சாஸ் சிட்டி பகுதியில் நேற்று நடைபெற்ற பேரணியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 21 பேர் காயமடைந்துள்ளனர்.



# விண்ணுக்கு அணு ஆயுதத்தை அனுப்பவுள்ளது ரஷ்யா

## அமெரிக்கா பரபரப்பு தகவல்

ரஷ்யா விண்வெளிக்கு அணுகுண்டு ஒன்றை அனுப்பவுள்ளதாக அமெரிக்க தரப்பிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், அணுகுண்டை விண்வெளிக்கு அனுப்பும் முயற்சியில் ரஷ்யா இறங்கியுள்ளதாகவும், ரஷ்ய பொறியாளர்கள் ஆயுதத்தை உருவாக்கி வருகின்றனர் என்றும் வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த தகவல் அறியவந்ததை தொடர்ந்து, அமெரிக்க தலைவர்கள் அவசரமாக கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, அந்த அணுகுண்டானது பூமியின் மீது வீசப்படுவதற்காக அல்ல என்றும் அது விண்வெளியில் இருக்கும் செயற்கை கோள்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு என்றும் அமெரிக்க தரபப்பில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.




# 70 ஆண்டுகளுக்கு முந்திய காதல் கடிதம் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டது

அமெரிக்காவில் 70 ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவ அதிகாரி ஒருவர் தனது காதலிக்கு எழுதிய கடிதம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேரி கிரிப்ஸ் என்ற பெண்ணுக்கு இராணுவ அதிகாரி பிளெம்மிங் இந்த கடிதத்தை எழுதியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தைச் சேர்ந்த ரிக் ட்ரோஜனோவ்ஸ் என்பவர் கடந்த 2017 ஆம் ஆண்டு ஒரு பழைய கருவிப்பெட்டியை ஏலத்தில் வாங்கியுள்ளார்.

இந்த நிலையில் அந்த பெட்டியில் 70 ஆண்டுகள் பழமையான காதல் கடிதம் ஒன்று இருப்பதை ரிக் தற்போது கண்டுபிடித்துள்ளார்.

சான் பிரான்சிஸ்கோவில் இருந்து வந்துள்ள அக்கடிதத்தில் “கடந்த கால சண்டைக்காக மன்னிப்பு கேட்கிறேன். விரைவில் வந்து உன்னை திருமணம் செய்து கொள்கிறேன்“ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேரி கிரிப்ஸ் என்ற பெண்ணுக்கு இராணுவ அதிகாரி பிளெம்மிங் இந்த கடிதத்தை எழுதினார் என தெரிகிறது. இதையடுத்து தற்போது இந்த கடிதத்தை உரியவரிடம் சேர்க்க ரிக் ட்ரோஜனோவ்ஸ் முயற்சித்து வருகிறார்.

எந்த விதமான முதிர்ச்சியும் இன்றி, நோக்கு நிலை இருப்பியல் வாதத்தைக் கடந்தே வெறும் வார்த்தை ஜாலங்களால் மேலிடையிட்டிருக்கிறார்கள்.

தமது கட்சி யாப்பின் படி நகர முடியாதவர்கள் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை விடயத்தில் எப்படி உண்மையாக இருப்பார்கள் என்று நம்புவது?

2009 கட்சி மாநாட்டில் இருந்து யாப்பை பின்பற்றுவது இல்லை நான் கட்சியில் இருந்த காலத்தில் பல முறை கூட்டங்களில் கூறியமையுடன் எழுத்திலும் சுட்டிக்காட்டியுள்ளேன். யாவும் செவிடன் காது சங்கே. என்றோ ஒருநாள் இதற்குப் பதில் சொல்வீர்கள் என்று பல முறை கூறியுள்ளேன்.

“மஹிந்தவின் அமைச்சரவை




# எழுபத்தைந்தாவது ஆண்டில் பயணிக்கும் தமிழரசுக் கட்சியின் பரிதாப நிலைமை!

**மன்னாரைச் சேர்ந்தவரும் தமிழரசுக் கட்சியின் முன்னாள் இளைஞர் அணித் தலைவரும் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவருமான வி.எஸ்.சிவகரன் தமது முகநூலில் ‘ஒய்யாரக் கொண்டையிலே தாளம் பூவாம் உள்ளே இருப்பது ..........மாம்’ என்ற தலைப்பில் வரைந்த குறிப்பு இன்றைய நிலைக்குப் பொருத்தமாக இருந்தமையால் இங்கு பிரசுரமாகின்றது.**



போன்றதே சேனாதிராசாவின் கட்சியில் பதவிகள்” என 2014 ஆம் ஆண்டு வவுனியாவில நடந்த கட்சி மாநாட்டில் முன்னாள் நாடளுமன்ற உறுப்பினர் அமரர் செல்வராசா பகிரங்கமாகக் கூறினார்.

தற்போது நடைபெற்ற கட்சி தேர்தல் முழுமையாக யாப்பை மீறியதே.கட்சியில் பொது இணக்கம் இல்லாத போது யாப்பு பேசு பொருளாகும் என்பதை இவர்கள் புரிந்திருக்க வேண்டும்.

01) கட்சியின் அடிப்படை உறுப்பினர்கள் இல்லாத பலர் பொதுச்சபையில் வாக்களித்துள்ளனர்.

02) சாதாரண வருடாந்த (100/ஸ்ரீ) உறுப்பினர்கள் தமது உறுப்புரிமையை மீளப் புதுப்பிக்கவில்லை. இப்படிக் குறைந்தது அறுபது நபர்களுக்கு மேல் எப்படி வாக்களிக்க அனுமதித்தார்கள்?

கட்சி யாப்பின் 12 விதி (ஆ) கூறுகிறது:- “ஆறு மாதங்களுக்கு உறுப்புரிமை கட்டணம் செலுத்தாதோரும் செயற்குழுவினால் வேண்டப்பட்ட குறைந்த இரண்டு வருடங்களுக்கு மேல் சேவை செய்யாதோரும் எந்தக் கூட்டத்திலும் எந்த தேர்தலிலும் வாக்களிக்க அருகதையற்றவர்.

(இ 18 மாதங்களுக்கு மேல் கட்சிக் கட்டணம் செலுத்தாதோரும் குறைந்தளவு சேவை செய்யாதோரும் மத்திய செயற்குழுவினால் அங்கத்தவர் பட்டியலில் இருந்து நீக்கப்படக்கூடியவர்.

03) ஒவ்வொரு தொகுதியில் இருந்தும் தலா ஐந்து பேரே பொதுச்சபை உறுப்பினர்கள். அதன் படி 25 தொகுதிகள். 125 உறுப்பினர்கள். தவிரவும் மத்திய குழு உறுப்பினர்கள் 41. ஆக மொத்தம் 166 நபர்களே பொதுச் சபை அங்கத்தவர்கள் ஆவார். ஆனால் 345 நபர்களுக்கு மேல் அழைக்கப்பட்டனர். இவ்விடயம் தவறு என (சேனாதிராசா, குலநாயகம், சிறிதரன்,சுமந்திரன் ஆகியோருக்கு) தேர்தலுக்கு முதலே நான் கூறியிருந்தேன்.

கட்சி யாப்பு விதி 07 (ஆ) மத்திய செயற்குழுவினரும் ஒவ்வொரு தொகுதிக் கிளையிலும் தெரிவு செய்யப்பட்ட ஐந்து உறுப்பினரும் பொதுச்சபை உறுப்பினராவர்.

04) பொதுச்சபைக் கூட்டத்திற்கு தலைவரது நியமனத்தில் எவரையும் அழைக்க முடியாது. கட்சியாப்பில் எங்கும் அப்படி அழைக்கலாம் எனக் கோடி காட்டப்படவில்லை. ஆனால் அப்படி 20நபர்களுக்கு மேல் பொதுக்குழுவுக்கு அழைக்கப்பட்டனர்.

மத்திய குழுவுக்கு மட்டுமே தலைவரால் 11 நபர்களை நியமிக்க முடியும். என்கிறது கட்சி யாப்பு.விதி 8. (அ). பகுதி 04

05) கட்சியின் மாநாடு ஒவ்வொரு ஆண்டும் நடைபெற வேண்டும்.

06). தலைவர் தேர்தலை பொதுச்செயலாளர் தலைமையில் தான் நடைபெற வேண்டும். கட்சி யாப்பு விதி 09 (எ).

ஆனால் செயலாளர் உடல் நிலை சீரற்றிருந்த போது அது நடத்தப்பட்டது.

07) செயலாளர் இல்லாத போது தேர்தலை எட்டுப் பெயர் கொண்ட குழுவை வைத்து நடத்துவதற்கு யாப்பில் இடமில்லை. இந்த நியமன அதிகாரம் எவருக்கும் இல்லை.

08) பொதுச்சபை உறுப்பினர்களுக்கு 14 நாள்களுக்கு முதல் அறிவிக்கவேண்டும்.ஆனால்மாநாட்டிற்குமுதல்நாளேபலருக்கு அழைப்புக் கிடைத்தது.

ஆகவே இந்த பகிரங்க யாப்பு மீறல் தொடர்பில் பல உறுப்பினர்களுக்கு எதுவும் தெரியாது. யாப்பையே கண்ணால் கூட அவர்கள் பார்த்தவர்கள் அல்லர். அறிந்தவர்களும் அமைதி காத்தனர். மூத்த உறுப்பினர்கள் என்று கூறும் பலரும் யாப்பை பற்றித் தவறான விளக்கங்கள் கூறினார்கள்.

சமூக பொறுப்பில் இருந்து விலகிய பத்தி எழுத்தாளர்கள் வழமை போல் ஆழமாகத் தேடுவதும் இல்லை. ஆராய்வதுமில்லை.

உள்ளதை உள்ளபடி உரைக்க மறுத்த ஊடகங்கள். அதிலும் யாழ் நகர மையவாத ஊடகங்கள் வழமை போல வட்டத்திற்குள் சதுரம் கட்டும் வேலையைத்



கொழும்பு ஊடகங்கள் எவருக்கும் நோகாமல்வழமைபோல்நழுவியிருந்தார்கள். இப்படி யாவரும் பொறுப்பற்று நகர்ந்தால் இந்த இனத்தின் எதிர்கால நிலை என்ன???

2009 ஆண்டுக்கு பின் தமிழ்மக்களுக்கு தலைமை தாங்குகிறோம் என்று கூறும் கட்சியின் உண்மை முகத்தை பகிரங்கப்படுத்த எவராலும் முடியவில்லை. இது அரசியல்வாதிகளின் தனிப்பட்ட விவகாரம் இல்லை. வெளிப்படைத்தன்மையுடன் கூட்டுப்பொறுப்பு மிக மிக அவசியம். இது இன விடுதலை அரசியல்.

ஆகவே இந்த தவறுகளை ஏற்றுக் கொண்டு யாப்பின் அடிப்படையில் மீண்டும் தேர்தலை நடத்துவதே கட்சியின் எதிர்காலத்திற்கு உகந்தது. இல்லையேல் பல வருடங்கள் நீதிமன்றப் படி ஏற வேண்டி வரலாம். தேர்தலுக்கு சின்னத்திற்கும் சிக்கல் வரலாம்.

கட்சி தேர்தலில் எவர் வெற்றி பெற்றாலும் இந்த நிலை வரும் என ஏலவே எதிர்வு கூறப்பட்ட விடயம்தான். சனநாயகத்தின் அரும்பு நிலையில் உள்ள நாம் இந்தப் பண்பு சார் நெறிமுறைக்குப் பக்குவப்பட இன்னும் பல வருடங்கள் கடக்க வேண்டும்.

எதிர்காலத்தில் கட்சி ஐக்கியத்துடன் செயற்பட வாய்ப்பு மிக மிக குறைவு. மாற்று வழி தேடி நகரக் கூடிய ஏது நிலை சிலருக்கு ஏற்படலாம். அது தமிழினத்திற்கு பலவீனமே. பதவி மோகம் எந்த நிலைக்கும் அஞ்சாது.

இந்த நிலைக்கு அடிப்படைக்காரணம் சம்பந்தன், சேனாதி இருவரின் சுயநலமும் பதவி மோகமுமே.



# வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(வசந்தன்)

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும், வன்னி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில், கடந்த மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப் பட்ட தீர்மானங்களின் தற்போதைய நிலை, வனவளத் திணைக்களத்திடம் இருந்து காணி விடுவிப்பு, வீதி புனரமைப்பு, பொருளாதார அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர் பில் கலந்துரையாடப்பட்டது.

இதில் வன்னி நாடாளுமன்ற உறுப் பினர்களான செல்வம் அடைக்கல நாதன், சாள்ஸ் நிர்மலநாதன், உள்ளூ ராட்சிசபைகளின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர் கள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# தேசியப் புலனாய்வுப் பிரிவிற்கு வவுனியா நகரில் காணி வழங்குவதற்கு ஆளுநரினால் பரிந்துரை

## ஆனால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அதற்கு எதிர்ப்பு

(வசந்தன்)

வவுனியா, பூங்கா வீதியில் அமைந்துள்ள அரச காணியில் தேசியப் புலனாய்வு அலுவலகத்திற்கு காணி வழங்குவதற்கு வடமாகாண ஆளுநர் பீ.எச்.எம்.சாள்ஸ் பரிந்துரைத்துள்ள நிலையில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அதற்கு நேற்று எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

காணியற்ற அரச திணைக்களங்களான அரச ஒசுசல, புவிச்சரிதவியல் திணைக்களம், தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, பனை அபிவிருத்திச் சபை, சமூக நீர்வழங்கல் திணைக்களம், தேசியப் புலனாய்வு அலுவலகம் மற்றும் பொது அமைப்புக்களான ஓட்டோ உரிமையாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், பஸ் உரிமையாளர் சங்கம், பாரவூர்திசங்கம், ஓய்வூதியர் சங்கம், ஊடகவியலாளர் சங்கம் ஆகியன தமக்கு நகரப் பகுதியில் காணி ஒதுக்கித் தருமாறு வவுனியா பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தன எனத் தெரிவிக்கப்பட்டது

அதற்கமைய இந்த அமைப்புக்களுக்கு வவுனியா பூங்கா வீதிப் பகுதி மற்றும் திருநாவற்குளம் பாரவூர்தி தரிப்பிடம் அமைந்துள்ள பகுதி ஆகியவற்றை பிரித்து வழங்குவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிடம் அனுமதி கோரப்பட் டிருந்தது.

இதன்போது, பூங்கா வீதியில் அமைந்துள்ள காணி தேசியப் புலனாய்வு அலுவலுகத்திற்கு வழங்குவதற்காக வடக்கு மாகாண ஆளுனர் பீ.எச்.எம்.சாள்ஸினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காணியை தேசியப் புலனாய்வு அலுவலுகத்திற்கு வழங்குவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

இதன்போது, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் கு.திலீபன் கருத்து தெரிவிக்கையில் –




பூங்கா வீதியில் அமைந்துள்ள இடம் தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு வழங்குவதற்கு ஆளுனரால் பரிந்துரைக்கப்பட் டுள்ளது. நாங்கள் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்கு கூட்டத்திலும் அதை நிராகரித்தோம். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் நிராகரிக்கின்றோம். தேசிய புலனாய்வு திணைக்களத்திற்கு கொடுப்பதற்கு உடன்பாடில்லை. அதனை அரச திணைக்களங்களுக்கு அல்லது மாவட்ட மட்ட சங்கங்களுக்கு வழங்க வேண்டும் என முடிவெடுக்கின்றோம். – எனத் தெரிவித்தார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கருத்துத் தெரிவிக்கையில் –

வவுனியா மாவட்டத்தில் பல திணைக்களங்கள், பல சங்கங்கள் தமக்குக் காணி இல்லை என நீண்டகாலமாக கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. அவர்களுக்கு காணி வழங்கப்படவில்லை. தேசியப் புலனாய்வு பிரிவுக்கு நகரப் பகுதியில் காணி தேவையில்லை. அவர்கள் எங்கும் இருக்க முடியும். இரகசியமாக அவர்கள் இருக்க வேண்டியவர்கள். பொலிஸிற்குள் கூட இருக்க முடியும். அந்த இடம் பொது அமைப்புக்களுக்கு கொடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும். – எனத் தெரிவித்தார்.



# அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்கு மார்ச் 15 வரை விண்ணப்பிக்க முடியும்

அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் நேற்று முதல் மார்ச் 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

தகுதி பெறும் அனைவருக்கும் எவ்வித தடங்கலும் இன்றி அஸ்வெசும பலன்கள் கிடைக்குமெனவும் நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும முதற்கட்டத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத குடும்பங்களுக்கும் விண்ணப்பங்களை சமர்ப்பித்தும் வீட்டுத் தகவல் கணக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படாத எந்தவொரு நபர்களும் இரண்டாம் கட்டத்திற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும இரண்டாம் கட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன இந்த விடயங்களைத் தெரிவித்தார்.



அஸ்வெசும இரண்டாம் கட்டத்தின் கீழ் 24 லட்சம் குடும்பங்களுக்கு நன்மைகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பத்தை ஒன்லைன் முறையிலும் கிராம உத்தியோகத்தர் அல்லது பிரதேச செயலகத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், றறற.றடிடி.பழஎ.டம என்ற இணையத்தளத்தின் ஊடாக சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்ய முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.





# கெஹலிய நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை

உடல்நலக் குறைபாட்டினால் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்த முடியாமல் போனதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளதாக வைத்தியரால் அறிக்கை வழங்கப்பட்டது என சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப்பேச்சாளருமான காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளார்.





# குடு சலிந்துவின் உதவியாளர் கைது

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் நபரான 'குடு சலிந்து' என்பவரின் உதவியாளர் ஒருவர் டுபாயில் கைது செய்யப்பட்டு நாட்டிற்கு அழைத்துவரப்பட்டுள்ளார்.

பியுமி ஹஸ்திக என்ற அந்த நபர் குற்றப்புலனாய்வு பிரிவினரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை பகுதியில் போதைப்பொருள் வர்த்தகராக அடையாளப்படுத்தப்பட்டுள்ள குடு சலிந்துவுடன் இணைந்து சந்தேகநபர் செயற்பட்டுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, குடு சலிந்து அண்மையில் மடகஸ்காரில் கைது செய்யப்பட்டு நாட்டிற்கு அழைத்துவரப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி நிதி மோசடி; கம்பஹாவில் இருவர் கைது

கம்பஹாவில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி நிதி மோசடிகளில் ஈடுப்பட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் கணினிக் குற்றப்பிரிவினரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சந்தேகநபர்கள் பல்வேறு தரப்பினரிடம் இவ்வாறு நிதி மோசடியில் ஈடுபட்டனர் எனக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, அவர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் கம்பஹா – வேபட பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.




சந்தேகநபர்களிடம் இருந்த தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், தொலைபேசி என்பன குற்றவியல் விசாரணை திணைக்களத்தினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.



# அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர் அலுவலர்களுடன் மைத்திரி சந்திப்பு

(த.சுபேசன்)

அமெரிக்கா சென்றிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி உதவிச் செயலாளர் திருமதி அஃப்ரின் அக்தாருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் புதன்கிழமை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இடம் பெற்றது.

இதன்போது இலங்கையின் அரசியல் நிலைவரங்கள் குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் உருவாக்கப்படும் கூட்டணி மற்றும் இருதரப்பு விடயங்கள் தொடர்பிலும் மிகவும் வெற்றிகரமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலாளர் திருமதி அஃப்ரின் அக்தருடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட்ட முன்னாள் ஜனாதிபதி, இலங்கைக்கு வழங்கிய தாராளமான ஆதரவிற்கும் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.



இக்கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெளிவிவகாரச் செயலாளர் சஜின் வாஸ் குணவர்தன, இலங்கை மத்திய குழு உறுப்பினரும் இலங்கை தொழில் வல்லுநர்கள் அமைப்பின் தலைவருமான கலாநிதி சமில லியனகே ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவிலிருந்து இன்று புதுடில்லி சென்றடையவிருக்கின்றார்.

# வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்காக கிளிநொச்சியில் செவ்வாயன்று பேரணி

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தொடர் போராட்டம் ஆரம்பித்த 7ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி வரும் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் பேரணி ஒன்று இடம் பெறவிருக்கின்றது.

இது தொடர்பில் 'வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் – வடக்கு கிழக்கு மாகாணங்கள்' அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:–

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டம் வலி நிறைந்த ஏழு ஆண்டுகளைக் கடந்து வரும் 20.02.2024 இல் எட்டாவது ஆண்டில் கால் பதிக்கிறது.

இந்தப் போராட்டத்தில் நாம் அனுபவித்த வலிகள், இடையூறுகள், தடைகள் ஏராளம். எனினும் இதுவரை காலமும் தாங்கள் எமக்களித்த ஆதரவும் ஊக்கமுமே எம்மை மனவலிமையுடன் போராட வைத்தன.

எனவே கடந்த வருடங்களில் போன்று இந்த வருடமும் இந்நாளை அடையாளப்படுத்தும் முகமாக ஒரு பேரணி 20.02.24 அன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசாமி கோயில் முன்றிலில் தொடங்கி கிளிநொச்சி டிப்போ சந்தி வரை நடைபெறும்.

இந்தப் பேரணியில் கலந்து எமக்கு ஊக்கமளிப்பதுடன் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் எங்கள் முயற்சியிலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். – என்று உள்ளது.




# தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையிலான இருக்கின்ற தொடர்புகளைப் பயன்படுத்துவது குறித்து ஆராய்கிறோம்

## மன்னாரில் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட்)



இலங்கை மக்களுக்கு நாங்கள் செய்த உதவிகள் சமுதாய நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டவை. இதே போன்றே மீனவ சமூகம் முக்கியத்துவம் பெறுகின்றது என இலங்கைக்கான இந்திய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் 'இந்தியாவிலிருந்து அன்புடனும் அக்கறையுடனும்' எனும் தொனிப் பொருளில் மன்னார் மாவட்ட மீனவ சமாசங்களுக்கு குளிர் சாதனப் பெட்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மதியம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, அவரது துணைவியார் மற்றும் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் பாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய 4 மீனவ சமாசங்களுக்கு குளிர்சாதன பெட்டிகள் வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்டத்தின் எனது முதல் விஜயமாக இது அமைந்துள்ளது.இங்கு என்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, என்ன தேவைகள் உள்ளன என்பதை அறிந்துள்ளேன்.

2010 இல் இருந்து இங்கு அமுல்படுத்தி உள்ள பல்வேறு திட்டங்களையும் என்னால் நினைவு கூர முடிகிறது.

இலங்கை மக்களுக்கு நாங்கள் எவ்வாறு உதவி செய்துள்ளோம், அவை சமுதாய நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டவை, அதே போன்றே மீனவ சமூகமும் முக்கியத்துவம் பெறுகின்றது.

மன்னாரிற்கு அதிகம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றமையைப் பார்க்கக் கூடியதாக உள்ளது. குறிப்பாக இந்தியாவில் இருந்து வருகை தரும் மக்களினால் இங்கு ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளைப் பார்க்க முடிகிறது.

அரச அதிபர் கூறியது போல் தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் இருக்கின்ற தொடர்புகளை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை ஆராய்ந்து வருகிறோம்.

அதற்கு தேவையான விடயங்களை அங்கு முன்னெடுத்து வருகிறோம்.

குறிப்பாக மீனவ சமூகத்திற்கு தேவையான உள்கட்டமைப்பு. தொழில்நுட்ப மற்றும் இந்தியாவில் இருந்து கொண்டு வர வேண்டியவை தொடர்பாகவும் ஆராய்ந்து வருகிறோம்.

சில மாதங்களுக்கு முன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு தொழில்நுட்பக் குழு ஒன்று வருகை தந்திருந்தது.

இங்கு இறால் மற்றும் நண்டு வளர்ப்பது தொடர்பான தொழில்நுட்ப ரீதியான உட்கட்டமைப்பு என்பவை தொடர்பாகவும் வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அதேபோன்று வேறு பல வேலைத் திட்டங்க ளையும் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.



# இன்றைய ராசி பலன்கள் - 16.02.2024




இன்று உங்கள் தைரியம் குறைந்து காணப்படும். என்றாலும் நம்பிக்கையுடனும் ஜாலியாகவும் இருங்கள்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவு காணப்படாது. அவர்களால் சில பிரச்சினைகள் உருவாகலாம்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை வேண்டும். அது உங்கள் துணையுடன் இணக்கமான உறவுமுறை வளர்ப்பதற்கு உதவும்.

பணப்புழக்கம் குறைந்த அளவில் காணப்படும். கூடுதல் செலவினங்களை எதிர்கொள்வதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

மனஅழுத்தம் காரணமாக சோர்வு காணப்படும். முதுகு வலியின் காரணமாக பிரச்சினைகள் தோன்ற வாய்ப்பு காணப்படுகின்றது.




நீங்கள்இன்று காரியங்களை உறுதியுடனும் கவனமான முறையிலும் ஆற்ற வேண்டும். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல. ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் ஆறுதல் பெறலாம்.

அதிகப் பணிகள் காரணமாக உங்களால் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்மையை வெளிப்படுத்துவீர்கள். சமநிலையான அணுகு முறையோடு செயற்பட்டால் நல்ல புரிந்துணர்வை உருவாக்க முடியும்.

பணப்புழக்கம் மிகவும் குறைவாக காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாத நிலை காணப்படும். தேவையற்ற அதிகமான செலவினங்கள் ஏற்பட்டு கவலைகளை அளிக்கும்

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி இருமல் போன்ற ஒவ்வாமை நோய்கள் பாதிப்பு இருக்கும்.




இன்று நீங்கள் உயரத்தை அடைவதற்கு மிகவும்அனுகூலமான நாள். உங்கள் திறமைகளை மிகவும் உறுதியுடன் வெளிப்படுத்த வாய்ப்பு நிறைந்த அற்புதமான நாள்.

உங்களுக்கு சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். பணியும் பணியிடச் சூழலும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். அதனால் நீங்கள் திறம்பட செயலாற்ற முடியும்.

உங்கள் துணையிடம் எளிதான மற்றும் இலேசான அணுகுமுறையைக் கொண்டிருப்பீர்கள். இது உங்கள் துணை உங்களை நன்கு புரிந்து கொள்ள உதவும்.

நிதிநிலைமை சீராகவும் பாதுகாப்பாகவும் காணப்படும். நல்ல சம்பாத்தியமும் அதனால் திருப்தியும் காணப்படும்.

நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். நீங்கள் திடமாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் உங்கள் வாழ்வின் முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். உங்கள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளின் ஆதரவு கிடைக்கும் நாள்.

நீங்கள் உங்கள் பணியில் பிரகாசிப்பீர்கள். உங்கள் திறமான செயல்திறன் உங்கள் மேலதிகாரிகளை உங்கள் பக்கம் ஈர்க்கும்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் உங்கள் வீட்டிற்கு வரும் விருந்தாளியின் வரவை எதிர்பார்த்து காத்துக் கொணடிருப்பீர்கள்.

பணவரவு அதிகமாக காணப்படும். இருக்கும் பணத்தை கவனமாக முதலீடு செய்ய வேண்டும்.

ஆரோக்கியம் சிறந்து இருக்கும். உங்கள் மனதிடம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று நடைமுறைக்கு ஏற்ற மற்றும் கருத்துள்ள செயல்களில் ஈடுபடுங்கள். முன்கூட்டிய திட்டமிடல் வெற்றிக்கு வழிவகுக்கும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. சில தடைகள் காரணமாக உங்கள் பணிகளை உங்களால் தரமுள்ளதாக திறம்பட ஆற்ற இயலாது.

உங்கள் துணையின் மனநிலை மாறுபாடுகள் உங்கள் அமைதியைக் குறைக்கும். நல்லுறவை பராமரிப்பதை சற்று சவாலாகவே உணர்வீர்கள்.

குறைந்த அளவு பணப்புழக்கம் காணப்படும். குடும்பத் தேவைகளுக்காக ஏற்படும் அதிக செலவினங்களால் வருத்தப்பட நேரிடலாம். ஒவ்வாமை காரணமாக இருமலால் அவதிப்படுவீர்கள்.




இன்று முன்னேற்றம் காணப்படாது. இன்று எளிதில் உணர்ச்சிவசப்படுவீர்கள். எதையும் இலேசாக எடுத்துக்கொள்ளுங்கள். பிரார்த்தனைக்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பது கடினமாக இருக்கும். பணியில் ஏற்படும் சில சந்தேகங்கள் காரணமாக பணியில் தொய்வு இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாகப் பேசுவீர்கள். மகிழ்ச்சியை தக்கவைத்துக்கொள்ள இது மிகவும் முக்கியம்.

உங்களுடைய அலட்சியப் போக்கால் பண இழப்புகள் காணப்படும். நடக்கும் பொழுது கீழே விழுவதற்கான வாய்ப்பு உள்ளது. எச்சரிக்கையாக ஜாக்கிரதையாக நடக்க வேணடும்.




இன்று நம்பிக்கையான வெற்றிகரமான நாள். நீங்கள் இன்று முக்கியமான முடிவுகளை எடுக்கலாம்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் வெகுமதிகளை பெற்றுத் தரும். நீங்கள் உங்கள் பணிகளை உற்சாகத்துடன் செய்வீர்கள்.

அன்பும் அரவணைப்பும் நகைச்சுவையுடன் வெளிப்படுத்துவதன் மூலம் உங்கள் துணையுடன் நீங்கள் உறவை பலப்படுத்திக்கொள்ள முடியும்.

நிதிநிலைமை நன்றாக இருக்கும்.உபரிப் பணத்தைக் கொண்டு உங்கள் தேவைகளை சமாளிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து விளங்கும். உங்கள் நேர்றையான போக்கு உங்கள் ஆரோக்கியத்தை சிறக்கச் செய்யும்.




இன்று உங்கள் இலட்சியங்கள்நிறைவேறும் பரிபூரணமான நாள். மகிழ்ச்சிகரமான தருணங்கள் சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் அள்ளித்தரும். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

ஒப்புக்கொண்ட பணிகளை முடித்துத்தரவேண்டும் என்றமனஅழுத்தம்காணப்படும்.சகபணியாளர்களுடனான நல்லுறவு பயனளிக்கும்.

உங்கள் அன்பான அணுகுமுறை உங்கள் துணை உங்களை நன்கு புரிந்து கொள்ள உதவும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்க வேண்டும் என்ற உந்துதல் அதிகரிக்கும்.

சிறந்த ஆரோக்கியத்தைப் பராமரிப்பீர்கள். சிறந்த ஆற்றலுடன் துடிப்புடன் நீங்கள் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.02.2024




இன்று தடைகளை வென்று திருப்தி கரமாக இருக்கும் நாள். யோகா மற்றும் தியானம் மேற்கொண்டு கவலைகளை நீக்கி மனதை அமைதியுடன் வைத்துக் கொள்ளுங்கள்.

பணிகள் சம்பந்தமாக சில இடையூறுகள் காணப்படும். அதிர்ஷ்டத்தை நம்பாமல் கடின உழைப்பின் மீது நம்பிக்கை வையுங்கள். அது வெற்றிக்கு வழிவகுக்கும்.

சந்தேக உணர்வுகள் உறவில் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையை நன்கு புரிந்துகொள்ள முயல வேண்டும்.அதிகமான பணப்புழக்கம் இருக்காது. வரவைவிட செலவுகள் அதிகமாக இருக்கும். இன்று பதற்றம் காணப்படும். அது உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். உங்கள் தன்னிலையை இழக்க வைக்கும்.




நண்பர்களின் ஆதரவு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் நேரத்தை வேலையில் ஈடுபடுவதில் கழிப்பதன் மூலம் உங்கள் குறிக்கோளை அடைய முடியும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சியை அளிக்கும் உங்களுக்கு தரப்பட்ட பணிகளை அனுபவித்துச் செய்வீர்கள் என்றாலும் வெற்றி பெறுவதற்கு கடினமாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக்கொள்ள நீங்கள் போராடுவீர்கள். உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு நிகழ்ச்சியைப் பற்றி உங்கள் துணையுடன் கலந்தாலோசிப்பீர்கள்.

உங்கள் சம்பாத்தியம் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிக்க முடியும். ஆரோக்கியம் நலல முறையில் காணப்படும். நீங்கள் திடமாக காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் சாதகமாக இல்லை. நீங்கள் சவாலான சூழ்நிலைகளை சந்திக்க வேண்டியிருக்கும் குடும்பப் பிரச்சினைகள் மற்றும் அதிகரிக்கும் ஒப்புக் கொண்ட பொறுப்புகள் கவலையை அளிக்கும். பிரார்த்தனை செய்வதன் மூலம் மன ஆறுதல் மற்றும் பாதுகாப்பு உணர்வு பெற முடியும்.

பணிகள் சவாலானதாக இருக்கும். அதிக பணிச் சுமை காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். திறம்பட திட்டமிடுவது நல்லது.

உங்கள் உணர்வுகளை வெளிப்படையாகப் பேசமாட்டீர்கள். இது அதிருப்தியை உண்டாக்கும்

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்காது. மருத்துவ சிகிச்சைக்காக நீங்கள் சில செலவுகளைச் செய்ய வேண்டியிருக்கும்.




நீங்கள் பாதுகாப்பற்ற உணர்வைப் பெறுவீர்கள். அசௌகரியங்கள் ஏற்படலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். பணிகளைத் திட்டமிட்டுச் செய்வது பணியில் வெற்றி பெற உதவிகரமாக இருக்கும்.

முக்கியமான விஷயங்களைப் பற்றி உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேச வேண்டும். அதனைச் செய்வதன் மூலம் நீங்கள் நல்ல புரிந்துணர்வை வளர்க்க முடியும். பணப்புழக்கம் பொதுவாக குறைந்து காணப்படும். ஆரோக்கியம் சம்பந்தமாக நீங்கள் சில செலவுகளைச் செய்ய வேண்டியிருக்கும்.

ஆரோக்கியத்தில் அக்கறையும் கவனமும் தேவை. கால்கள் மற்றும் மூட்டுக்களில் திடீரென வலிகள் தோன்றலாம்.







# இஸ்ரேல் - இலங்கை இடையில் நேரடி விமான சேவை ஒப்பந்தம்

## பலாலியிலிருந்து இந்தியாவுக்கு மற்றொரு தினசரி சேவை



இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையிலான நேரடி விமான சேவை ஒப்பந்தம் நேற்று முற்பகல் கைச்சாத்திடப்பட்டதாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இலங்கைப் பணியாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதில் ஏற்படும் தாமதங்களைத் தடுப்பது இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையில் நேரடி விமான சேவை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இஸ்ரேல் போக்குவரத்து அமைச்சு மற்றும் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சுக்கும் இடையே கைசாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி, இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன் மூலம் பயணிகளுக்கு வசதியை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

அத்துடன் இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் தற்போதுள்ள சேவை உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கைப் பணியாளர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதில் ஏற்படும் தாமதத்தை தடுப்பது, இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். பல இஸ்ரேலியர்கள் இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்ய எதிர்பார்த்துள்ளனர் என்றும் இஸ்ரேலிய போக்குவரத்து அமைச்சர் எம்மிடம் குறிப்பிட்டார்.

அத்துடன், பலாலி விமான நிலையத்தின் ஊடாக இந்தியாவுக்கான மற்றுமொரு தினசரி விமான சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் இண்டிகோ விமான சேவை நிறுவனத்துடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன், மத்தள விமான நிலையம் தொடர்பில் முதலீட்டு விருப்பங்கள் கோரப்பட்டன. அதன்படி, டெண்டர் சபை ஒரு முதலீட்டாளரை தெரிவு செய்துள்ளது.

மேற்படி முதலீட்டாளருடனான பேச்சுவார்த்தைகள் தற்போது இறுதி கட்டத்தில் உள்ளன. அடுத்த வாரம் உடன்பாடு எட்டப்படலாம். அதன் மூலம் அந்த விமான நிலையத்தையும் இலாபமீட்டும் வகையில் மாற்ற முடியும். இந்த ஒப்பந்தம் ரஷ்ய மற்றும் இந்திய தனியார் கூட்டுத் திட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்துடன், கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில், 31 பயணச்சீட்டு கருபீடங்கள் மற்றும் புதிய முனையக் கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கும் முதலீட்டு விருப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 06 பில்லியன் ரூபாவாகும். அதன் பிரகாரம் அடுத்த இரண்டு வாரங்களில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளமையுடன் தற்போதுள்ள போக்குவரத்து நெரிசலுக்கு 09 மாதங்களுக்குள் தீர்வு காண முடியும்.

அத்துடன், ஜப்பான் ஜெய்க்கா நிறுவனத்தின் தலைவர் நேற்று (புதன் கிழமை) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய கலந்துரையாடலில் இரண்டாவது முனையக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான நிதியை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார். மேலும், ஸ்ரீலங்கன் விமான சேவையின் மறுசீரமைப்புக்கான முதலீட்டு விருப்பங்களைத் தெரிவிக்கும் காலம் மார்ச் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொள்கலன் கப்பல் போக்குவரத்து சுமார் 32 வீத வளர்ச்சி கண்டுள்ளது. அதிகரித்து வரும் கொள்ளளவுக்கு ஏற்ப துறைமுகத்தை விரிவுபடுத்தும் வகையில், துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான நிதியில் 580 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவழித்து கிழக்கு முனையம் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. அதன்படி, ஈ.சி.ரி. முனையம் மூலம் அதிக அளவிலான கொள்கலன்களை பரிமாற்ற முடியும், இதன் மூலம் எமது நாட்டிற்கு அதிக வருமானத்தை ஈட்டுவதற்கான வாய்ப்பும் உள்ளது.” – என்றார்.

# பொலிஸ் அலுவலரிடையே முழங்காவிலில் கைகலப்பு

(ந.லோகதயாளன்)

முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் மது போதையில் இருந்தவர்கள் எனக் கூறப்படும் பொலிஸார் இடையே அடிதடி மோதலை அடுத்து அவர்களில் மூவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டம் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு சில பொலிஸார் ஒன்றுகூடி மது அருந்தியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. இதன்போது போதை தலைக்கேறிய சமயம் மது அருந்தியவர்கள் இடையே கை கலப்பு ஏற்பட்டுள்ளது. அதில் படுகாயமடைந்த மூன்று. பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவ்வாறு மாவட்ட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட திருகோணமலையைச் சேர்ந்த பொலிஸார் ஒருவர் அங்கிருந்து வெளியேறி யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழுவில் அவ்விடயத்தை ஒட்டி முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை ஆராய்ந்த மனித உரிமை ஆணைக்குழு, வைத்தியசாலை ஒன்றில் தம்மை சேர்த்து அங்கிருந்து வைத்திய அறிக்கையை பெற்று வருமாறு அவருக்கு வழி காட்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.



# இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் பாராட்டு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (ஜெய்கா) தலைவர் கலாநிதி தனக்கா அகிஹிக்கோவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

புதிய பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வது கடினமான செயலாக இருந்தாலும் இலங்கையில் பொருளாதார சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அர்ப்பணிப்பை கலாநிதி தனக்கா அகிஹிக்கோ பாராட்டியுள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புத் திட்டம், இலகு ரயில் திட்டம் மற்றும் மத்திய அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட ஜப்பானிய உதவியின் கீழ் இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை துரிதமாக மீள ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்துள்ளார்.

கடந்த கால பொருளாதார நெருக்கடியின்போது, இலங்கைக்கு வழங்கிய தொடர்ச்சியான ஆதரவிற்காக ஜப்பானிய அரசாங்கம் மற்றும் ஜெய்காவிற்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடன் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க ஜெய்கா தயாராக இருப்பதாக கலாநிதி அகிஹிட்டோ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் விவகார பணிப்பாளர் தினுக் கொழும்பகே ஆகியோரும் கலந்துகொண்டனர்.







# சுங்கத் திணைக்களத்தினரின் சட்டப்படி வேலை ஆரம்பம்

சுங்க திணைக்களத்தினர் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

சம்பளப் பிரச்சினை, பதவி உயர்வு வழங்காமை, ஊழியர் பற்றாக்குறை உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக நிவர்த்திக்கப்படாத பாரிய பிரச்சினைகளை முன்வைத்து சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம் என சுங்க திணைக்களத்தினர் ஊடக அறிக்கையொன்றினூடாகத் தெரிவித்துள்ளனர்.

விசேடமாக சுங்கச் சேவைக்கான திருத்தப்பட்ட ஆள்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய, தற்போது 4 வருடங்களாக சுங்க சேவையின் பதவியுயர்வு, பதவியுயர்வுகளுக்கான சம்பள நிர்ணயம் உள்ளிட்ட விடயங்களை உடனடியாக நிவர்த்திக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதனைத் தவிர, சுங்கத் திணைக்களத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள சேவைக்கு மேலதிகமாக இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை உடனடியாக நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. திணைக்களத்தினுள் வெற்றிடமாக உள்ள இடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் விநியோக தரவுகள் அழிப்பு

## அமைச்சர் கஞ்சன விஜேசேகர தகவல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய முனைய நிறுவனத்தின் எரிபொருள் களஞ்சியப்படுத்தல் மற்றும் எரிபொருள் விநியோகம் என்பனவற்றுடன் தொடர்புடைய 13 லட்சம் தகவல்கள் (தரவுகள்) பிரதான தரவுக் கட்டமைப்பிலிருந்து அல்லது எஸ்.ஏ.பி. தளத்திலிருந்து அழிக்கப்பட்டு அல்லது மாற்றப்பட்டுள்ளன என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டிலிருந்து தரவு அழிப்பு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது என அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.




எரிபொருள் நெருக்கடி நிலவிய 2022 ஆம் ஆண்டிலேயே பெருமளவான தரவு அழிப்பு செயற்பாடு இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கே.பி.எம்.ஜி. நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில், அமைச்சர் இந்த விடயங்களை வெளிக்கொணர்ந்துள்ளார்.

இது தொடர்பான முழுமையான அறிக்கை, எதிர்வரும் வாரம் கே.பி.எம்.ஜி. நிறுவனத்தால் வழங்கப்பட்ட பின்னர், அதனை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு வழங்க தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எரிசக்தி அமைச்சர் தெரிவித் துள்ளார்.

அத்துடன், இந்த அறிக்கையை மேலதிக நடவடிக்கைகளுக்காக அமைச்சரவைக்கும் நாடாளுமன்றத்திற்கும் கணக்காய்வாளர் திணைக்களத்திற்கும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.